தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

13.08.2013

**16-ல் விவசாயிகள்குறைதீர்வுக் கூட்டம்**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம், வரும் ஆகஸ்டு 16-ம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட அறிக்கை: ஆகஸ்டு மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம், வரும் 16-ஆம் தேதி காலை மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் நடைபெறும். எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்க பிரதிநிதிகளும், விவசாயிகளும் வரும் 16-ஆம் தேதி நடைபெற இருக்கும் விவசாயிகளின் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பங்கேற்று பயனடைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயற்கை வேளாண்மை வளர்ச்சி பெறஒருங்கிணைந்த செயல்பாடு தேவை**

இயற்கை வேளாண்மை வளர்ச்சி பெற, இயற்கை ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார்.

சிவகாசியில் ஞாயிற்றுக்கிழமை மாலை நம்மாழ்வார் சுற்றுச்சுழல் பாதுகாப்பு இயக்கம், டயட்-யோகா இயற்கை புத்துணர்வு மையம், பசுமை இயக்கம், தாய்வழி இயற்கை உணவகம் ஆகியவை இணைந்து இயற்கை வாழ்வியல் விழிப்புணர்வு கருத்தரங்கினை நடத்தின. இதில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசியதாவது:

நாட்டின் பல பகுதிகளில் மண் சரிவு ஏற்படுகிறது. மரங்களை அகற்றிவிட்டு கட்டிடங்கள் கட்டுவதால் இந்த நிலை ஏற்படுகிறது. எனவே காடுகளில் மரங்களை பாதுக்க வேண்டும். விவசாய விலை பொருள்களுக்கு நியாயமான விலை வழங்கப்படவில்லை. இந்தியாவில் 60 சதம் பேர் கிராமத்தில் உள்ளனர். அவர்களுக்கு போதிய தண்ணீர் வழங்கினால், எதனையும் எதிர்பார்க்காமல் விவசாயம் செய்துகொண்டிருப்பார்கள். அமெரிக்காவில் ஒன்றரை சதம்பேர் தான் கிராமங்களில் உள்ளனர்.

வெளிநாட்டினர் வியாபாரம் ஆகவேண்டும் என இந்தியாவந்து, உரம் பூச்சிமருந்து உள்ளிட்டவைகளை விற்று லாபம் பார்த்துவிட்டார்கள். அதனை பயன்ப

டுத்திய இங்குள்ள விவசாயிகளின் நிலை சிறிதும் உயரவில்லை. வருங்காலத்தில் நகர் பகுதிகளில் நல்ல காற்றுக்கூட கிடைக்காது. தற்போது கிராமங்களில் சுகமான காற்றுவீசுகிறது. அதனை பாதுகாக்க வேண்டும். காய்கறி உள்ளிட்ட உணவுப் பொருள்களில் நஞ்சுகலந்துவிட்டது.

ஆண்டுக்கு ஒரு லட்சம் டன் உணவு தானியம் வீணாகிறது. இந்தநிலை மாற வேண்டும் என்றால், இயற்கை விவசாயம் ஒன்றுதான் மாற்றாக இருக்கும்.

தற்போது பொறியல் துறையில் படித்தவர்கள், இளைஞர்கள் என்னிடம் இயற்கை வேளாண்மை குறித்து பயிற்சி பெற வருகிறார்கள். அது எனக்கு ஒரு நம்பிக்கையை கொடுத்துள்ளது. இனியாவது நாம் விழித்துக்கொள்ள வேண்டும்.

மரகன்றுகள் நடுவதில் ஆர்வம் உள்ளவர்கள், மாசுபடுவதை எதிர்ப்பவர்கள், சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என விரும்புபவர்கள் போன்ற இயற்கை ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டால், இயற்கை விவசாயம் மேலும் நல்ல வளர்ச்சி பெறும் என்றார்.

நிகழ்ச்சிக்கு ஏ.ராமசாமி தலைமை வகித்தார். தொழிலதிபர் ஆர்.ஜெகதீஸ் சங்கர், பசுமை இயக்கம் சிவா, வானகம் கருப்பசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாய்வழி இயற்கை உணவகத்தின் நிர்வாகி ஜி.மாறன் வரவேற்றார்.

இன்னர்வீல் கிளப் நிர்வாகி ஏ.சியாமளா, தொழிலதிபர்கள் எஸ்.சேர்மத்துரை, எம்.ஜேசுதாஸ், ஓய்வு பெற்ற பொறியாளர் கே.வரதராஜன் ஆகியோர் பேசினர். கிரிதரன் நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணைநீர்மட்டம் 84.53 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 84.53 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,601 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் இருந்து ஆற்றில் 1,150 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 18.21 டி.எம்.சி.

**சோலையாறில் 27 மி.மீ. மழை**

சோலையாறு அணைப் பகுதியில் திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 27 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): தூணக்கடவு 12, பெருவாரிப்பள்ளம் 15, அப்பர் நீராறு 12, லோயர் நீராறு 17, வால்பாறை 7, சின்கோனா 13.

**தமிழகத்தில் அதிக வறட்சி நிவாரணம்**

தமிழகத்தில் விவசாயிகளுக்கு அதிக அளவில் வறட்சி நிவாரணம் வழங்கியுள்ளார் முதல்வர் ஜெயலலிதா என நடிகர் ஆனந்தராஜ் கூறினார்.

அதிமுக அரசின் சாதனைகள் விளக்கப் பொதுக்கூட்டம் சேத்துப்பட்டில் உள்ள எம்ஜிஆர் திடலில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர் சின்னக்குழந்தை தலைமை தாங்கினார். நகரச் செயலாளர் எம்.ஜி.ராதாகிருஷ்ணன் வரவேற்றார். தொகுதிச் செயலாளர் முருகன், அவைத் தலைவர் அர்ச்சுனன், ஒன்றியப் பொருளாளர் காளியப்பன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன், போளூர் எம்எல்ஏ ஜெயசுதா ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக நடிகர் ஆனந்தராஜ் பங்கேற்றுப் பேசியது:

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்தவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா. மற்ற மாநிலங்களைவிட இங்கு அதிக அளவில் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு மட்டும் அல்லாமல் தென்னை, வாழை, கரும்புக்கும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

கூட்டத்தில் முன்னாள் எம்எல்ஏ ஏ.கே.எஸ்.அன்பழகன், நகர துணைச்செயலர் கமலக்கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல் விதைகள்**

பரமத்திவேலூர் வட்டம், பரமத்தி வேளாண்மை அலுவலகத்தில் விவசாயிகளுக்கு 50 சத மானிய விலையில் நெல் விதைகள் விநியோகிக்கபட்டு வருகின்றன.

இதுகுறித்து பரமத்தி உதவி வேளாண்மை இயக்குநர் குருலிங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பரமத்தி வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்கும் பொருட்டு தற்பொழுது பரமத்தி வேளாண்மை விரிவாக்க மையத்தில் சான்று பெற்ற நெல் விதைகளான வெள்ளை பொன்னி, ஆடுதுறை 39, ஆடுதுறை 45

மற்றும் பி.பி.டி. 5204 ஆகிய நெல் விதைகள் 50 சத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி நெல் விதைகளை பெற்றுச் செல்லலாம். மேலும், தரமான விதைகளை உற்பத்தி செய்ய 600 விவசாயிகளுக்கு நிகழாண்டு விதை கிராமத் திட்டத்தில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு எண்ணெய் வித்து உற்பத்தி திட்டப் பயிற்சி**

குன்னாண்டார்கோவில் வட்டாரம் கிள்ளுக்கோட்டை கிராமத்தில் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு எண்ணெய் வித்துத்திட்ட பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம்.ஷாஜகான் தலைமை வகித்து தொடக்கி வைத்து பேசியது: வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி எண்ணெய்வித்து பயிர்களை சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம். நடவுமுறையில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.7500- மானியம் வழங்கப்படுகிறது என்றார்.

இதைத்தொடர்ந்து, விவசாயிகளுக்கு உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் (பொறுப்பு) சதானந்தம், வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன், வேளாண் உதவி இயக்குநர் சங்கரலெட்சுமி,

நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் எஸ். சோமசுந்தரம், மத்திய அரசு திட்ட வேளாண்மை அலுவலர் ஜெகதீஸ்வரி, வேளாண் அலுவலர் மதியழகன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு மானியவிலையில் கம்பு, வரகு மற்றும் திணை போன்ற சிறுதானிய உணவு, பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இதில், குன்னாண்டார் கோவில் துணை வேளாண் அலுவலர் ஆதவன், உதவி வேளாண் அலுவலர் பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை, உழவர் மன்ற அமைப்பாளர் அந்தோனிலாரன்ஸ் செய்திருந்தார்.

**கும்பகோணத்தில் 37 மி.மீ. மழை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக கும்பகோணத்தில் 37 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்):

கும்பகோணம் 37, பாபநாசம் 29, வல்லம் 25, நெய்வாசல் தென்பாதி 24.8, கல்லணை 20.8, குருங்குளம், பேராவூரணி தலா 16, அய்யம்பேட்டை 12, பூதலூர் 11.4, கீழணை 11, ஈச்சன்விடுதி 10.2, வெட்டிக்காடு 10, திருவிடைமருதூர் 9, ஒரத்தநாடு, திருக்காட்டுப்பள்ளி தலா 6.4, பட்டுக்கோட்டை, திருவையாறு தலா 5, அதிராம்பட்டினம் 4.3, மஞ்சலாறு 4.2, தஞ்சாவூர் 4, மதுக்கூர் 2.

**நீடாமங்கலத்தில் 62 மி.மீ. மழை**

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் ஞாயிற்றுக்கிழமை 62 மில்லி மீட்டர் மழைப் பெய்தது.

தமிழகத்தில் வெப்ப சலனம் காரணமாக, கடந்த சில நாள்களாக மாலை, இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: பாண்டவையாறு தலைப்பு - 54.60, மன்னார்குடி - 36.20, வலங்கைமான் - 35.40, திருத்துறைப்பூண்டி - 28, திருவாரூர் - 22.40, குடவாசல் - 15.20, நன்னிலம் - 10.20, முத்துப்பேட்டை - 2.20 என்ற அளவில் மழைப் பதிவானது.

**இன்று கனமழை பெய்ய வாய்ப்பு**

வடதமிழகம், புதுவையின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச்சலனத்தின் காரணமாகவும் தென்மேற்கு பருவமழையின் காரணமாகவும் தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வடதமிழகம் மற்றும் புதுவையில் கனமழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வட தமிழகத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. வெப்பச்சலனம் மற்றும் காற்றின் மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள சுழற்சியின் காரணமாக இந்த மழை பெய்யும் என்று தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: வடதமிழகம் மற்றும் புதுவையின் சில பகுதிகளில் செவ்வாய்க்கிழமை கனமழை பெய்யும். தென் தமிழகத்தில் ஆங்காங்கே மழையோ இடியுடன்கூடிய மழையோ பெய்யும்.

தமிழகத்தில் பதிவான மழை அளவு (திங்கள்கிழமை காலை வரை - மி.மீட்டரில்): பேரையூர், துவாக்குடி - 70, நீடாமங்கலம் - 60. திருச்சுழி, அறந்தாங்கி - 50, வாணியம்பாடி, தம்மம்பட்டி, உளுந்தூர்பேட்டை, கும்பகோணம், மன்னார்குடி - 4, வலங்கைமான், திருத்துறைப்பூண்டி, பரமத்தி வேலூர், விருத்தாச்சலம், திருவண்ணாமலை, வந்தவாசி, திருக்கோவிலூர், வல்லம், பாபநாசம், குடியாத்தம் - 30, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இளையாங்குடி, காரைக்குடி, வேலூர், திருமங்கலம், திருவாரூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், பேராவூரணி, கல்லணை, லால்குடி, திருவள்ளூர், செஞ்சி, புதுக்கோட்டை - 20, ஆம்பூர், கடலூர், கல்பாக்கம், வாழப்பாடி, வால்பாறை, ஈரோடு, கோவில்பட்டி - 10.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.08.2013**

## மரவள்ளி கிழங்கு விலை உயர்வு: பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

ப.வேலூர்: மரவள்ளி கிழங்கு, வரலாறு காணாத விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ப.வேலூர் மற்றும் சுற்று வட்டாரப்பகுதியான பரமத்தி, பாண்டமங்கலம், கபிலர்மலை, சோழசிராமணி, பிலிக்கல்பாளையம், ஜேடர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், 2,000க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பத்து முதல், 12 மாதப் பயிரான மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்ய, 20,000 ரூபாய் செலவாகும். இப்பயிருக்கு, தண்ணீர் தேவையும் குறைவு. அதனால், அதிக அளவில், விவசாயிகள், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ளனர். இந்த மரவள்ளிக்கிழங்கு, ஜவ்வரிசி மற்றும் சிப்ஸ் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. அதன்படி, நாமக்கல் மாவட்டம் செல்லப்பம்பட்டி, நாமகிரிப்பேட்டை, சேலம், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆலைகளுக்கு, ஜவ்வரிசி தயாரிக்க, விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல், ஈரோடு, கோவை, கேரளா போன்ற பகுதிகளுக்கு, சிப்ஸ் தயாரிக்கவும் அனுப்பிவைக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக, 15 டன் வரை அறுவடை செய்யலாம். இந்நிலையில், இம்மாதம், கிழங்கு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த மாதம், ஒரு டன் கிழங்கு, ஜவ்வரிசி ஆலைகளுக்கு, 13,500க்கும், சிப்ஸ் தயாரிக்கும் நிறுவனத்துக்கு, 15,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, தற்போது, சிப்ஸ் தயாரிப்பதற்கு, ஒரு டன், 17,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன், ஒரு டன் மிகக்குறைந்த விலையாக, 1,350 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
பிலிக்கல்பாளையத்தை சேர்ந்த விவசாயி ராஜா கூறியதாவது:
ப.வேலூர் பகுதியில், 2,000க்கும் அதிகமான ஏக்கரில், மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் மரவள்ளி, ஜவ்வரிசி ஆலைகளுக்கும், சிப்ஸ் தயாரிப்பதற்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன், கிழங்கு வாங்குவதற்கு ஆட்கள் இல்லாத நிலையில், ஒரு டன் கிழங்கு, 1,350 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது வரலாறு காணாத விலை உயர்வு ஏற்பட்டுள்ளது, மகிழ்ச்சியாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

### இயற்கை முறையில் வெங்காயம் சாகுபடி அதிக மகசூல் எடுத்து விவசாயி சாதனை

ராசிபுரம்: சோதனை அடிப்படையில், இயற்கை முறையில், சின்ன வெங்காயம் பயிரிட்டு, அதிக மகசூல் எடுத்து, விவசாயி ஒருவர் சாதனை படைத்துள்ளார்.
ரசாயன உரங்கள் பயன்படுத்துவதால், உடல் நலத்துக்கு அதிக பாதிப்பு ஏற்படுவதாக கூறப்படும் நிலையில், இயற்கை உரங்கள் மூலம், உற்பத்தி செய்யப்பட்டுள்ள இந்த முறையிலான விவசாயம், விவசாயிகளிடையே அதிகம் வரவேற்பு பெற்றுள்ளது. மல்லசமுத்திரம் பகுதியில், 2,000 ஹெக்டேர் பரப்பளவில், சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளையும், அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாக, வேளாண் அறிவியல் நிலையம் வழிகாட்டுதல் பேரில், தோட்டக்கலை துறையில், "கோ 5' ரக வெங்காய விதைகள் பெற்று, சோதனை அடிப்படையில், விவசாயி சங்கரன், தனது தோட்டத்தில் பயிரிட்டார்.
இயற்கை முறையில் பயிரிடப்படுவதால், உற்பத்தி செலவு குறைவதுடன், மகசூல் அதிகம் கிடைக்கும் என அறிவியல் நிலையம் அறிவுறுத்தியதால், "கோ 5' ரக

வெங்காயத்தை, கால் ஏக்கர் பரப்பில் மட்டும் பயிரிட்டார். அதற்கென கோழி எரு, ஆடு, மாட்டின் சாணம், வேப்பம் புண்ணாக்கு போன்ற இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்தினார். அதனால், அதிக மகசூல் எடுத்துள்ளதுடன், வெங்காயம் பெரியதாகவும் விளைச்சல் கண்டுள்ளது. அதனால், மற்ற விவசாயிகளும், இயற்கை முறையில் வெங்காயம் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.
வழக்கமாக வெங்காயம் மூன்று மாத பயிர் என்றாலும், இயற்கை முறையில், நாற்றங்கால் அடிப்படையில், இந்த வெங்காயம் பயிரிடப்படுவதால், அறுவடைக்கு ஒரு மாதம் கூடுதலாக நான்கு மாதம் ஆகிறது. இருப்பினும், கூடுதல் மகசூல் கிடைப்பதுடன், அடர் ரோஸ் நிறத்தில் வெங்காயம் கிடைக்கிறது.
வழக்கமான முறையில், ஏக்கருக்கு, ஆறு டன் வெங்காயம் மகசூல் எடுக்க முடியும் என்ற நிலையில், இயற்கை முறை மகசூலில், ஏக்கருக்கு, ஏழரை டன் வெங்காயம் உற்பத்தி செய்ய முடியும். அதேபோல், புதூர்மலையாம்பட்டி பகுதியில் உள்ள விவசாயி கணேசன், "கோ 5' ரக வெங்காயத்தை, இயற்கை முறையில், அரை ஏக்கரில் பயிரிட்டுள்ளார். அதற்கென, தனி பயிற்சி எடுத்துள்ள அவர், ஏற்கனவே கடலை, நெல் ஆகியவற்றை பயிரிட்டு, அதிக மகசூல் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நவீன தொழில் நுட்ப முறையிலான உரங்கள், பூச்சிமருந்து போன்றவற்றை பயன்படுத்தி வரும் விவசாயிகள், இயற்கை விவசாயத்தை கேலி செய்தாலும், மற்ற விவசாயிகள் சாதனை படைத்து வருவதால், இயற்கை விவசாயம் மேற்கொள்வதில், ஆர்வம் காட்டுகின்றனர்.

## மேட்டூர் அணை நீர்வரத்து 11,294 கனஅடியாக சரிவு

மேட்டூர்: நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 11,294 கனஅடியாக குறைந்தது.
தொடர் நீர்வரத்தால் கடந்த, 4ம் தேதி இரவு மேட்டூர் அணை நிரம்பி நீர்மட்டம் முழு கொள்ளளவான, 120 அடியை எட்டியது. கடந்த, 6ம் தேதி வினாடிக்கு, 1.31

லட்சம் கனஅடி நீர் மேட்டூர் அணைக்கு வந்த நிலையில், பருவமழை தீவிரம் குறைந்தால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 16,912 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று, 11,294 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 18,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்வரத்தை விட நீர் வெளியேற்றம் அதிகரித்ததால் நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 119.650 அடியாகவும், நீர் இருப்பு, 92.915 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. நேற்று ஒரே நாளில் நீர் இருப்பு அரை டி.எம்.சி., குறைந்துள்ளது.

## மழையால் தர்பூசணி சேதம்

திண்டிவனம்:திண்டிவனம் அருகே உள்ள குரூர் கிராமத்தில் மழையால் தற்பூசணி பயிர் சேதமாகியுள்ளது.ரம்ஜான் பண்டிகை விற்பனைக்காக திண்டிவனம் அடுத்த குரூர் கிராமத்தில் விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் கடந்த ஜூன் மாதம் தர்பூசணி பயிர் செய்தனர். சில தினங்களாக திண்டிவனம் பகுதியில் பெய்த மழையால் குரூர் கிராமத்தில் தர்பூசணி பயிரிட்டிருந்த நிலங்களில் தண்ணீர் தேங்கியது. அறுவடைக்கு தயாராக இருந்த தர்பூசணி பழங்கள் அழுகும் நிலையில் உள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## கருவேப்பிலை பயிரிடவிவசாயிகள் ஆர்வம்

திண்டிவனம்:திண்டிவனம் அடுத்த முன்னூர், முத்தாம்பாளையம் கிராமத்தில் விவசாயிகள் கருவேப்பிலை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.திண்டிவனம் அடுத்த முன்னூர், முத்தாம்பாளைம் பகுதியில் பருவமழையை நம்பி மானாவாரிய மணிலா, கம்பு, கேழ்வரகு பயிறும் கிணற்று பாசனத்தில் நெல் பயிர் செய்வது வழக்கம். இந்த பயிர்கள் மூன்று, 4 மாதம் ஆனபின் அறுவடை செய்யப்படும்.ஆனால் விவசாயிகள் கருவேப்பிலை பயிர் செய்வதால் காய்கறி கடைகாரர்கள் தோட்டத்திற்கு வந்து வாங்கிச் செல்கின்றனர். இது தினம் வருமானம் தரக்கூடிய பயிராக உள்ளது. உள்ளூர் மார்க்கெட்டில் நல்ல

கிராக்கியும் நல்ல விலையும் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதனால் விவசாயிகள் கருவேப்பிலை பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### பருவ மழையை எதிர்பார்த்துநாற்று நடும் பணி துவங்கியது

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், பருவமழையை எதிர்பார்த்து, விவசாயிகள் நாற்று நடவு செய்யும் பணியில், ஈடுபட்டு வருகின்றனர்.காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஏரிகள் அதிகளவில் உள்ளதால், விவசாயம் அதிகளவில் செய்யப்படுகிறது. இதனால், நெல் உற்பத்தியில், தஞ்சாவூருக்கு அடுத்த படியாக, காஞ்சிபுரம் மாவட்டம் திகழ்ந்து வருகிறது. குறையும் சாகுபடி இந்நிலையில், ஆழ்துளை கிணறு நீர் மட்டம் குறைவு, நிலங்கள் வீட்டுமனைகளாக விற்பனை, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், விவசாய நிலங்களின் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.இருப்பினும், ஒரு சில ஆழ்துளை கிணற்று நீரை பயன்படுத்தி, இங்குள்ள விவசாயிகள் குறைந்த பரப்பளவில், நெல் உற்பத்தியை செய்து வருகின்றனர். கடந்த சில தினங்களாக, அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இந்நிலையில், பருவமழையை எதிர்பார்த்து, நாற்று நடவுப் பணியை விவசாயிகள் துவக்கியுள்ளனர். தீவிரம்இதுகுறித்து, விவசாயி ஒருவர் கூறியதாவது:மழை துவங்கி இருப்பதால், ஆழ்துளை கிணறுகளில் நீர் சுரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், தற்போது, நடவு செய்து வருகிறோம்.

இன்னும் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்தால், நெற்பயிர்களுக்கு ஏதுவாக இருக்கும். சம்பா பட்டத்தில், விவசாய சாகுபடி பரப்பு அதிகரிக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

### விவசாய தோட்டங்களில் மழை நீர்தேங்கியதால் விளைபொருட்கள் பாதிப்பு

கூடலூர்:கூடலூர் பகுதியில் தொடரும் மழையின் காரணமாக, இஞ்சி, நேந்திரன் வாழைகளை "கிழங்கு அழுகல்' நோய் தாக்க துவங்கி உள்ளதால், விவசாயிகள்

அதிர்ச்சி அடைந்துள்ளனர். கூடலூர் பகுதியில் விளையும் இஞ்சி,நேந்திரன் வாழைக்கு நடப்பாண்டில் நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால், விவசாயிகள் இஞ்சி, நேந்திரன் வாழை உற்பத்தியில், அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.இந்நிலையில், தொடரும் மழையால் தோட்டங்களில் மழை நீர் தேங்கி உள்ளதால், தற்போது இஞ்சி, நேந்திரன் வாழை நாற்றுகளை "கிழங்கு அழுகல்' நோய் தாக்க துவங்கியுள்ளது. இந்நோய் பாதிப்பால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.இந்நிலையில், புத்தூர்வயல் பகுதியில் இந்நோய் தாக்கிய இஞ்சி செடிகளை அகற்றி, அங்கு நெல் நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்."இப்பகுதியில் பயிர் சேதம் குறித்து ஆய்வு செய்து, உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என சிறு விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

## தோட்டக்கலை பயனாளிகள் தேர்வு...மும்முரம் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

தேனி : தோட்டக்கலைத்துறையில் தேசிய தோட்டக்கலை இயக்கம், துல்லிய பண்ணை திட்டங்களுக்கு, பயனாளிகள் தேர்வு நடந்து வருகிறது.
தோட்டக்கலைத்துறையில் மா, நெல்லி, கொகோ, முந்திரி ஆகியவை புதிய பரப்பில் சாகுபடி செய்வதற்கு, தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது. மாவிற்கு 9 ஆயிரத்து 900ம் ரூபாய், மா அடர் நடவிற்கு 24 ஆயிரம் ரூபாய், வாழைக்கு 30 ஆயிரத்தி 200 ரூபாய், கோகோ, கொட்டை முந்திரிக்கு 12 ஆயிரம் ரூபாய் மானியம் தரப்படுகிறது. தவிர, துல்லிய பண்ணை திட்டத்தில் ஒரு ஹெக்டேருக்கு 31 ஆயிரத்து 200 ரூபாயும், நுண்ணீர் பாசன திட்டத்தில் 37 ஆயிரத்து 440 ரூபாயும்,சேர்த்து 68 ஆயிரத்து 640 ரூபாய் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சம், 4 ஹெக்டேருக்கு மானியம் கிடைக்கும். இந்த மானிய தொகை முழுவதும் இடுபொருட்களாகவே வழங்கப்படும். தேவை அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு தரப்படும்.

கனகாம்பரம், மல்லிகை போன்ற உதிரி மலர் சாகுபடி திட்டத்தில், ஹெக்டேருக்கு 12 ஆயிரம் ரூபாய், சம்பங்கி மலர் சாகுபடிக்கு 45 ஆயிரம் ரூபாய், மிளகாய் சாகுபடிக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது. திராட்சைக்கு பந்தல் அமைக்க ஒன்றரை லட்சம் ரூபாய் மானியம் தரப்படுகிறது. தகுதியுள்ள விவசாயிகள் அந்தந்த ஒன்றியங்களில் உள்ள தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்தில் சிட்டா, அடங்கல், நில வரைபடம், ரேஷன் கார்டு ஜெராக்ஸ், பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் அணுகி விண்ணப்பிக்கலாம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.08.2013**

**இயற்கை உரங்களுக்கு மாறும் விவசாயிகள்**

காட்டுமன்னார்கோவில் பகுதியில் நெற் பயிர் அதிகமாக பயிரிடப்படுகிறது. நெற்பயிரில் ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக விவசாயிகள் சிலர் கூறுகின்றனர். இதை கருத்தில் கொண்டும், உரவிலை உயர்வு காரணமாகவும் விவசாயிகள் இயற்கை உரங்களுக்கு மாறி வருகின்றனர். கடந்த காலங்களில் இயற்கை தொழு உரங்களை கொண்டே விவசாய பணிகளை செய்தனர். இதனால் அதிக மகசூலும், இயற்கை தன்மை மாறாத உணவு பொருட்களும் கிடைத்தன. குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு பிறகு இயற்கை உரத்தை மறந்து செயற்கை உரத்துக்கு மாறினர்.

ஆனால், தற்போது கடுமையான விலை உயர்வு காரணமாகவும், ரசாயன மருந்துகள் அடிப்பதால் நன்மை செய்யும் பூச்சிகள் இறப்பதாலும், விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும். இதை கருத்தில் கொண்டு எளிதில் பூச்சிகள் நெற்பயிரை தாக்காத வண்ணம் இருப்பதற்கு ஏதுவாக இந்த பகுதியில் வேப்பம் கொட்டைகளை சேகரித்து, பேருந்துகள் செல்லும் சாலையில் உலர வைத்து பொடிகளாக மாற்றி வயல்களில் பயன்படுத்துகின்றனர்.

வேப்பங்கொட்டையின் தேவை அதிகரித்துள்ளதால் கிராமங்களில் வயதான முதியவர்கள் முதல் பள்ளி சிறுவர்கள் வரை காலையிலேயே வேப்பம் மரங்கள் இருக்கும் பகுதிகளுக்கு சென்று சேகரித்து நிலம் அதிகம் வைத்திருப்பவர்களிடம் விற்பனை செய்கின்றனர்.

கோடை காலங்களில் இந்த பணியில் சிலர் ஈடுபடுவதால் இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு தங்களுடைய குடும்ப நிலையையும் கவனித்து கொள்கின்றனர்.

**புதுகையில் பலத்த மழை ஏரி, குளங்களுக்கு நீர் வரத்து விவசாயிகள் மகிழ்ச்சி**

புதுக்கோட்டையில் நேற்று பெய்த மழையால் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.
புதுக்கோட்டையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதேபோல் நேற்று மாலை முதல் வானம் கருமேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு 7.30 மணிக்கு திடீரென மழை பெய்யத் துவங்கியது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பெய்த இந்த மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. நகரம் முழுவதும் குளிர்ச்சியான நிலை ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.
தொடர்ந்து தினமும் மழை பெய்து வருவதால் புதுக்கோட்டை நகரை சுற்றியுள்ள குளங்களில் மழைநீர் தேங்க துவங்கியுள்ளது. இதேபோல் தொடர்ந்து மழை பெய்தால் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கும், மக்களின் குடிநீர் தட்டுப்பாடும் தீர்ந்திட வழிவகை ஏற்படும். அனைத்து குளங்களும் நிரம்பி விவசாய பணிகளை துவங்கிட முடியும் என விவசாயிகளும் தெரிவித்துள்ளனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பல்கலைக்கழகத்தின் பணிகளை மக்களிடையே பரப்புவதற்காக சிறப்பு கால்நடை மருத்துவமுகாம் புலவன்காடு கிராமத்தில் நடைபெற்றது. 34 சினை பிடிக்காத மாடுகள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் சினைபிடிக்காத 15 மாடுகளுக்கு

சினைப்பருவ ஒருங்கிணைப்பு சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டது. 12 மாடுகளுக்கு செயற்கைமுறை கருவூட்டலும், நோய்களால் பாதிக்கப்பட்ட 70 மாடுகளுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டது. 104 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. பயனாளிகளுக்கு கால்நடை பராமரிப்பு மேலாண்மை வழிமுறைகள் பற்றி விழிப்புணர்வு கையேடுகள் வழங்கப்பட்டன. புலவன்காடு, பேய்கரும்பன்கோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர் பயனடைந்தனர்.

**மருந்து, உர நிறுவனங்களுக்காக 2 டன் வேப்ப விதை கொள்முதல்**

மருந்து மற்றும் உர நிறுவனங்களுக்காக தர்மபுரி மாவட்டத்தில் இந்த ஆண்டு 2 டன் வேப்பவிதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வேப்பமரம் அம்மனின் அவதாரம் என்று கிராம மக்கள் பலரும் கருதுகின்றனர். வேப்ப மரத்தின் இலை, பூ, பழம், விதை, பட்டை, வேர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் மருத்துவ குணம் கொண்டதாக விளங்குகிறது. வேம்புவிற்கு பராசக்தி மூலிகை, அரிட்டம், துத்தை, நிம்பம், பாரபத்திரம், பிதமந்தம், வாதாளி உள்ளிட்ட பல்வேறு பெயர்கள் உள்ளது. வேப்பமரத்தின் பூர்வீகம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்றும், இதன் மருத்துவ பயனால் பின்னர் உலகம் முழுவதும் பரவியது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வேப்பமரத்திற்கான காப்புரிமையை இந்தியா போராடி பெற்றுள்ளது. ஆலமரம், அரச மரத்தை போல் வேப்பமரமும் நீண்ட காலம் வரை வளரும் மரம். எப்போதும் பசுமையாக இருக்கும். மருத்துவ மகத்துவம் கொண்ட வேப்ப மரத்தின் விதை ஆயுர் வேதத்தில் அருமருந்தாக திகழ்கிறது. ஆனி மாதம் துவங்கி ஆடி, ஆவணி மாதம் வரை வேப்பம் பழங்கள் மரத்திலிருந்து பழுத்து உதிரும். கிராம புறங்களில் இதனை சேகரித்து விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தானிய மண்டிகளிலும் கொள்முதல் செய்யப்படுகிறது. சென்ற ஆண்டு

ஒரு கிலோ வேப்பங்கொட்டை ரூ25க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு கிலோ ரூ22க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.
வேப்பங்கொட்டையை மருந்து கம்பெனிகளும், உரம் தயாரிக்கும் கம்பெனிகளும் மொத்தமாக கொள்முதல் செய்கின்றன. விவசாயத்திற்கு தேவைப்படும் வேப்பம் புண்ணாக்கு, வேப்ப எண்ணெய், பூச்சி கொல்லி மருந்துகள் உள்ளிட்டவை தயாரிக்கவும் அழகு சாதனை பொருட்கள், சோப்பு ஆகியவை தயாரிக்கவும் இந்த விதை பயன்படுத்தப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் அதிக அளவில் வேப்பகொட்டைகள் மண்டிகளில் கொள்முதல் செய்யப்படுகிறது. சென்ற ஆண்டு மட்டும் 2700 டன் வேப்பங்கொட்டை தனியார் கம்பெனிகள் கொள்முதல் செய்தது.

இந்த ஆண்டு விதை வரத்து குறைவாக உள்ளது என்று வியாபாரிகள் கூறுகின்றனர். இதுகுறித்து வேப்ப விதை விற்பனை செய்யும் கமிஷன் மண்டி உரிமையாளர்கள் கூறும்போது, இந்த ஆண்டு வறட்சி காரணமாக வேப்பங்கொட்டை உற்பத்தி சுமார் 500 டன் அளவிற்கு குறைந்துள்ளது. கடந்த ஆண்டு பருவ மழை குறைவு காரணமாக விவசாய இடு பொருட்கள் விற்பனை சரிந்தது. இந்த ஆண்டும் இடு பொருட்கள் விற்பனை குறையும் நிலையே உள்ளது. இதனால் உரம் தயாரிப்பு நிறுவனங்களும் குறைவான அளவிற்கே வேப்ப கொட்டைகளை கொள்முதல் செய்கின்றன. தேவை குறைவு என்பதால் விலையும் குறைவாகவே உள்ளது என்றனர்.

மருத்துவ பயன்

வேப்ப இலையை மஞ்சள் சேர்த்து அரைத்து பூசிவர பொன்னுக்கு வீங்கி, பித்த வெடிப்பு, கட்டி, பருக்கள், அம்மை கொப்புளம் ஆகியவை குணமாகும். வேப்பம் பூ பித்தம் சம்மந்தப்பட்ட நோய்களை குணப்படுத்தும். வேப்பங்கொட்டையை உடைத்து உள்ளிருக்கும் பருப்பை அரைத்து புரையோடிய புண்கள் மீது பூசி வர

குணமாகும், குஷ்ட நோய்கள், நரம்பு பிரச்சனைகள், சீதளம் உள்ளிட்டவை குணமாகும். வேப்பிலை கஷாயம் மலேரியா நோயை குணப்படுத்தும், நீரிழிவு நோய், குடற் பூச்சிகளையும் சிறுநீரகம் தொல்லைகளையும் குணப்படுத்தும். வேப்பங்காய் ரத்த மூலத்தை குணப்படுத்தும். வேப்ப குச்சியால் பல் துலக்கி வந்தால் வாய் துர்நாற்றம் நீங்கும்.

**கொய்யாவில் மாவுப்பூச்சி தாக்குதல்**

பழநி அருகே ஆயக்குடி பகுதியில் கொய்யாவில் வெள்ளை ஈ தாக்குதல் நோய் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பழநி அருகே ஆயக்குடி பகுதியில் அதிகளவில் கொய்யா, நெல்லி, சப்போட்டா, மிளகாய், கத்தரிக்காய், பருத்தி உள்ளிட்டவைகள் பயிரிடப்படுகின்றன.

இங்கு விளையும் காய்கறி, பழங்கள் போன்றவை திருப்பூர், திருச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

கொய்யா விற்பனை சந்தையின் தலைநகரம் என ஆயக்குடி அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்கு பனாரஸ், 49, லக்னோ வகை கொய்யா அதிகளவில் விளைவிக்கப்படுகிறது.

பழநி பகுதியிலுள்ள கொய்யா கன்றுகளில் மாவுப்பூச்சி மற்றும் வெள்ளை ஈக்களின் தாக்குதல் தற்போது அதிகமாக உள்ளது. இதனால் கொய்யா மரக்கன்றுகளின் கொழுந்துகள் முளைப்பு தன்மையை இழந்துள்ளன.

மேலும் காய்கள் பூச்சி தாக்குதலுக்கு உள்ளாகி புள்ளிகள் விழுந்து உண்ணுவதற்கு தகுதியற்றதாகி விடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கொய்யா மட்டுமின்றி சப்போட்டா, எலுமிச்சை உள்ளிட்ட மற்ற காய்களிலும் இதே பாதிப்பு

ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். யானை தொந்தரவால் அவதிக்குள்ளான விவசாயிகளுக்கு தற்போது மற்றொரு தொந்தரவாய் இந்நோய் தாக்குதல் அமைந்துள்ளது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு தரமானது என பெயர் பெற்ற ஆயக்குடி கொய்யாவின் நிலை தற்போது தலைகீழாய் மாறி, ஆயக்குடி கொய்யா என்றாலே தவிர்க்கும் நிலை உண்டாகி உள்ளது.

இதுகுறித்து பழநி தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, பழநி பகுதியில் கடந்த 2 வருடங்களாக போதிய மழை இல்லை. அதனால் இப்பூச்சியின் இனப்பெருக்கம் அதிகரித்துள்ளது. ஆரம்ப கட்டமாக இருந்தால் வேம்பு எண்ணெயை கலந்து தெளித்தால் போதுமானது.

முற்றிய நிலையில் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி புரபனோபாஸ் அல்லது 10 லிட்டர் தண்ணீருடன் 6 மில்லி இமியோகுளோபிரிட் கலந்து தெளிக்கலாம். பார்த்தீனிய செடிகளின் மூலமே இப்பூச்சி பரவுவதால் விவசாயிகள் இச்செடிகளை உடனடியாக அகற்றி விட வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பழநி தோட்டக்கலைத் துறை அலுவலகத்தை அணுகலாம் என்றனர்